# தேவனுடைய உதவியுடன் வாழ்க்கையை மாற்றுதல் (16:13-40)

*பவுல் பிலிப்பி பட்டணத்தில் தமது ஊழியத்தைப் பற்றிக் குறிப்பிட்ட பொழுது, அதை அவர், "சுவிசேஷ பிரசங்கத்தின் ஆரம்பம்" (பிலி. 4:15; சில மொழிபெயர்ப்புகளில் "உங்களுக்கு" என்ற வார்த்தை உட்புகுத்தப்பட்டுள்ளது.) என்று அழைத்தார்; பவுல் ஏஜியன் கடலைக் கடந்த பொழுது, அதை அவர் தமது ஊழியத்தின் புதிய தொடக்கம் என்று எண்ணினார். பவுலின் ஊழியத்தினுடைய இந்தப் புதிய நிலையானது அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில், ஒன்றல்ல ஆனால் இரண்டு மனமாற்ற விபரங்களினால் கொண்டாடப்படுகின்றது. இவ்விரண்டும் ஒரு புதிய கண்டத்தைத் திறந்து வைத்த ''மனமாற்றங்கள் என்ற பாலம்'' என எண்ணப்படலாம். இவைகளில் முதலாவதை நாம் முந்திய பாடத்தில் படித்தோம்: அது லீதியாளின் மனமாற்றம் ஆகும். இப்பொழுது நாம் இரண்டாவதைப் பற்றிப் படிப்போம்: இது ரோமச் சிறைச் சாலைக் காவலர் ஒருவரின் மனமாற்றமாகும். இவ்விரண்டிற்கும் இடையில் தனி நபர் ஒருவரின் வாழ்வானது என்றென்றைக்குமாக மாற்றப்பட்ட இன்னொரு வரலாற்றையும் நாம் கவனிப்போம்.*

*இந்த கட்டுரையின் வலுவான தன்மையை நீங்கள் மதிப்பிடுவதற்கு உதவியாக, சுவிசேஷத்தை "முற்றிலுமாக ஏற்றுக் கொள்பவர்" ஒருவரைப் பற்றி உங்கள் மனதில் சித்தரித்துக் கொள்ளுங்கள். யாரேனும் ஒருவருக்கு நீங்கள் போதிக்க வேண்டுமென்று விரும்பினால், அந்நபரின் பண்புகள் எப்படிப் பட்டதாய் இருக்க வேண்டும்? ஒருவேளை நீங்கள் ஒரு குறிப்பிட்ட தனி நபரை கிறிஸ்துவுக்குள் கொண்டு வந்து*

*விடலாம் என்று மிகுந்த நம்பிக்கையாய் இருப்பீர்கள். "முற்றிலுமாக ஏற்றுக் கொள்பவர்" என்று நீங்கள் கருதும் அந்த நபர் உங்களை எந்த அளவுக்கு விரும்புகின்றார்? "முழுநிறை வான ஏற்றுக் கொள்பவர்" என்ற அவர் அநேகமாக உங்களைப் போன்றவராகவே இருக்கின்றார். சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்வதற்காக ஒருவரை நாம் நாடும்போது, நமது சொந்த இனம், நமது சொந்தக் கல்விப் பின்னணி, நமது சொந்த சமூக நிலை, நமது சொந்த திருமண நிலை ஆகியவைகள் கொண்ட வர்களையே நாம் தேடுகின்றோம். அப்படிப்பட்ட மக்களுடன் பழகுவதை நாம் வசதியானதாக உணருகின்றோம்.*

*எல்லா மக்களுக்கும் நற்செய்தி ஊழியம் செய்யும்படியாக நமது சுவிசேஷக் கண்ணோட்டத்தை விரிவு படுத்துவதே இப்பாடத்தின் மூலமாக நாம் பெறும் அறைகூவலாகும். அப். 16ம் அதிகாரமானது, சுவிசேஷம் எல்லாருக்கும் உரியதென்றும், தேவனுடைய உதவியுடன் எவரொருவரின் வாழ்க்கையும் மாற்றப்பட முடியுமென்றும் அதில் அவருடைய அல்லது அவளுடைய பின்னணி ஒரு பொருட்டல்ல என்றும் அறிவிக்கின்றது.*

## *தடுத்து நிறுத்த முடியாத ஒரு பெண் வியாபாரி (16:13-15)*

*நமது முந்திய பாடத்தில் சுவிசேஷமானது லீதியாள் என்னும் பெயருள்ள ஒரு பெண் வியாபாரியின் வாழ்க்கையை மாற்றியதைக் கண்டோம். நான் அவளை, "தடுத்து நிறுத்த முடியாத ஒரு பெண் வியாபாரி" என்று அழைக்கின்றேன் ஏனென்றால், அவள் பவுல், சீலா, தீமோத்தேயு மற்றும் லூக்கா ஆகியோருக்குத் தங்க இடமளிக்க முன் வந்தபோது "தங்க முடியாது" (இல்லை) என்ற பதிலை ஏற்றுக் கொள்ளும் நிலையில் அவள் இருந்ததில்லை. அவள் சுயாதீனமும், உறுதி யான சித்தமும் கொண்டவளாயிருந்தாள். அவள் விற்பனை செய்த உற்பத்திப் பொருளும் (இராஜரிக இரத்தாம்பரம்), அவளது பொருளாதார சூழ்நிலையும் (ஒரு பெரிய வீடும் அநேக வேலைக்காரர்களும்) பிலிப்பி பட்டணத்துச் சமூகத்தில் அவள் மேலான வர்க்கத்தின் பிரதிநிதி என்பதைச் சுட்டிக்*

காட்டுகின்றன. ஆயினும் மிக விரைவிலேயே பவுல், பிலிப்பி பட்டணத்துச் சமூக அளவையின் மேல் இருந்து அடிமட்டத் திற்குச் சென்றார்.

## குறி சொல்லும் ஆவி பிடித்த எரிச்சல் மூட்டும் ஒரு பெண் (16:16-22)

லூக்கா, அப். 16:12ல், "... அந்தப் பட்டணத்திலே சில நாள் தங்கியிருந்தோம்'' என்று குறிப்பிட்டார். அவ்வேளையில் பவுலும் மற்றவர்களும் அநேகரை மனந்திரும்பச் செய்து (வ. 40) பிலிப்பி பட்டணத்தில் ஒரு உள்ளூர் சபையை நிலை நாட்டினார்கள் (பிலி. 1:1). ஆயினும் 16:16-22ல் லூக்கா, பிலிப்பி பட்டணத்தில் பவுலின் தொடக்க கால ஊழியத்தின் நிறைவு வேளையில் நடந்த ஒரு நிகழ்ச்சிக்கு உடனடியாகச் சென்றார். வசனம் 16, ''நாங்கள் ஜெபம் பண்ணுகிற இடத்துக்குப் போகையில் குறிசொல்ல ஏவுகிற ஆவியைக் கொண்டிருந்து, குறிசொல்லுகிறதினால் தன் எஜமான்களுக்கு மிகுந்த ஆதாயத்தை உண்டாக்கின ஒரு பெண் எங்களுக்கு[1] எதிர்ப் பட்டாள்" என்று கூறுகின்றது.

"ஜெபம் பண்ணுகிற இடம்" என்பது அநேகமாக, அவர்கள் லீதியாளையும் மற்ற பெண்களையும் சந்தித்திருந்த இடமான கேங்கிட்டஸ் ஆற்றங்கரையாக இருக்கலாம் (16:13). ஒரு வேளை அவர்கள் ஜெபம் பண்ணும்படி அங்கே போய்க் கொண்டிருந்திருக்கலாம்; ஒருவேளை வேறு சில நேர்மையான இருதயமுள்ளவர்களை அங்கு காண முடியுமா என்று பார்க்க அவர்கள் அங்கே போய்க் கொண்டிருந்திருக்கலாம். அவர்கள் தங்கள் வழியில் செல்லுகையில், "ஒரு அடிமைப் பெண்ணை" சந்தித்தார்கள். லீதியாளின் வரலாற்றிலிருந்து இந்த அடிமைப் பெண்ணின் வரலாற்றுக்கு நகர்ந்து செல்வதென்பது, சமுதாயத் தின் மேல்தட்டு வர்க்கத்திலிருந்து, சமுதாயத்தின் மிகக் கீழ்த் தட்டு வர்க்கத்திற்கு நகர்ந்து செல்லுதல் என்பதாக உள்ளது. ஒரு அடிமை என்பவர்(ள்) ஒரு நபராகக் கருதப்பட்டதில்லை; ஒரு அடிமை என்பவர்(ள்) - உங்கள் வீடு, உங்கள் வீட்டுப் பொருட்கள், உங்கள் கருவிகள் போல-ஒரு உடைமையாகவே இருந்தார்(ள்).

குறிப்பிட்ட இந்த அடிமைப் பெண் “குறிசொல்ல ஏவுகிற ஆவியை'' உடையவளாயிருந்தாள், கிரேக்க வசனத்தில் “ஒரு மலைப்பாம்பின் ஆவியை” என்று இவ்விடத்தில் உள்ளது. (மலைப்பாம்பு என்பது ஆங்கிலத்தில் python எனப்படும். இது நாம் அறிந்துள்ளபடி, மிகவும் பெரியதும், நீளமானதுமாகும். இது தான் பற்றும் இரையை சுற்றித் தனது உடலால் இறுக்கி வளைத்து நெருக்கி அதை நொறுக்கக் கூடிய ஒரு பிராணியாகும்.) கிரேக்கப் புராணக் கதையில், அப்பொல்லோ என்ற கடவுள் மலைப் பாம்பைக் கொன்றதாகவும், அந்த மலைப் பாம்பின் ஆவியானது டெல்பியின் பெண் குரலைத் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்ததாகவும் கூறப்படுகின்றது. இதன் விளைவாக, டெல்பியின் குரல் ஒலி போன்ற வகையில் ஒரு பெண் வல்லமைகள் பெற்றபோது மக்கள், அவள் “மலைப் பாம்பின் ஆவியைப் பெற்றவள்'' என்று நம்பினார்கள்.[2] இச்சொற் றொடரை இவ்விடத்தில் லூக்கா பயன்படுத்தியதால், அவர் அந்த மூடநம்பிக்கையான கதையை நம்பினார் என்று அர்த்தமல்ல; அவர் ஒத்துப்போகும் தன்மையுள்ள மொழிநடையைப் பயன் படுத்தினார். அந்த ஏழைப் பெண், நாம் இதற்கு முன் 5:16 மற்றும் 8:7ல் படித்தது போன்ற அசுத்த ஆவி ஒன்றை உடையவளா யிருந்தாள்; அவள் பிசாசு பிடித்தவளாய் இருந்தாள். சாவுக்கேது வானவர்கள் (மனிதர்கள்) அறிந்திராத சில உண்மைகளைப் பிசாசுகள் உள்ளுணர்வால் அறிந்தன என்பது தெளிவாகும்,[3] இயற்கைக்கு அப்பாற்பட்ட இந்த அறிவானது கூட்டங்களைக் கவர்ந்து இழுத்தது. இவ்விதமாக, பிசாசு பிடித்த அந்தப் பெண் குறி சொல்லுகிறதினால் தன் எஜமான்களுக்கு ''மிகுந்த ஆதாயத்தை உண்டாக்கினாள்.”

கிறிஸ்தவம் பரவி வரும் செயலானது பகுத்தறிவற்ற நம்பிக்கைகள் பலவற்றை அழித்துத் துடைத்திருந்த போதிலும், சமீபத்திய வருடங்களில் நாம் மூடநம்பிக்கையின் புத்துயிர்ப்பு ஒன்றைக் கண்டிருக்கின்றோம். குறி சொல்லுபவர்கள், கைரேகை பார்ப்பவர்கள், படிகப்பந்து யூகிப்பாளர்கள், ஜாதகத்தை விளக்கம் கூறுபவர்கள், இடையீட்டாளர்கள், தங்களைத் தாங்களே உளநலவியலாளர் என்று அறிவித்துக் கொள்பவர்கள், ''வழிகாட்டாளர்கள்'' (ஆவியின் சக்தியும் குரலும் தங்கள் மூலம் கொண்டு வரப்படுவதாகச் சொல்பவர்)

ஏராளமாயிருக்கின்றார்கள் - இவர்கள் எல்லாரும், அறியாமை மற்றும் ஐயமின்மை ஆகியவை கொண்ட அனைவரையும் பட்சிக்கின்றார்கள். ஒரு கிறிஸ்தவர் என்பவர், இப்படிப்பட்ட மக்களையும் இவர்களின் பழக்கங்களையும் விலக்கி வைப்ப தோடு, மற்றவர்களும் தமது செயல்பாட்டைப் பின்பற்றும்படி ஊக்கப்படுத்த வேண்டும்.

அசுத்த ஆவி பிடித்த அந்தப் பெண்ணை ஊழியக்காரர்கள் சந்தித்த போது, அவளைக் காணாதது போல செல்லவே அவர்கள் முயற்சி செய்தார்கள் என்பது தெளிவு. அந்தப் பெண்ணோ தான் கண்டு கொள்ளாமல் விடப்படுவதை மறுத்தாள். அவள் அவர்களைப் பின் தொடர்ந்து வந்து, " இந்த மனுஷர் உன்னதமான தேவனுடைய ஊழியக்காரர், இரட்சிப்பின் வழியை நமக்கு அறிவிக்கிறவர்கள் என்று சத்த மிட்டாள் " (வ. 17). இவளுடைய வார்த்தைகள் கதரேன ருடைய நாட்டில் இயேசுவை "உன்னதமான தேவனுடைய குமாரன்" என்று அழைத்த (மாற். 5:7) அசுத்த ஆவியுள்ள மனிதனின் வார்த்தைகளை நமக்கு நினைவூட்டுகின்றன. அந்த அடிமைப் பெண்ணைப் பிடித்திருந்த அசுத்த ஆவியானது அந்த ஊழியக்காரர்கள் யார் என்பதையும், மற்றும் பிலிப்பி பட்டணத்தில் அவர்கள் இருந்ததற்கான நோக்கம் என்ன என்பதையும் அறிந்திருந்தது. யாக்கோபு, "... பிசாசுகளும் விசுவாசித்து நடுங்குகின்றன" (யாக். 2:19) என்று கூறினார்.

ஒவ்வொரு நாளும் பவுலும் அவரது கூட்டாளிகளும் எங்கெல்லாம் சென்றார்களோ, அங்கெல்லாம் அந்த அடிமைப் பெண்ணும் இருந்தாள், அவள் கூட்டத்தாரிடம்: "இந்த மனு ஷர் உன்னதமான தேவனுடைய ஊழியக்காரர்" என்று உரத்த சத்தமாய் அறிவித்தாள். "இப்படி அநேக நாள் செய்து கொண்டு வந்தாள்" (16:18அ) என்று லூக்கா கூறினார். கடைசியில், பவுலினால் அதைத் தாங்க முடியாமல் போயிற்று. "பவுல் சினங் கொண்டு திரும்பிப் பார்த்து: 'நீ இவளை விட்டுப் புறப்படும் படி இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உனக்குக் கட்டளை யிடுகிறேன்' என்று அந்த ஆவியுடனே சொன்னான்; அந்நேரமே அது புறப்பட்டுப் போயிற்று" (16:18ஆ; சினங்கொண்டு என்ற வார்த்தை கிரேக்கில் "அதிகமாய் தொந்தரவு அடைந்து"; KJV - ல் "ஆழ்ந்த துயரடைந்து"; NASB - ல் "சினம் கொண்டார்"

*என்றுள்ளது).*

*இவ்வசனப்பகுதியானது இரண்டு கேள்விகளை உண்டாக் குகின்றது: (1) அவள் உண்மையைப் பேசிய போது பவுல் ஏன் சினங்கொண்டார்? அசுத்த ஆவி பிடித்த ஒரு தனி நபருடன் ஊழியர்களுக்கு ஏதோ ஒப்பந்தம் இருந்தது என்று தோற்ற மளிப்பதைப் பவுல் விரும்பவில்லை என்பது தெளிவு.[4] இப்படிப்பட்ட ஒரு எண்ணமானது அவளுக்குச் சாதகமாகவும் அவர்களுக்குப் பாதகமாகவும் பிரதிபலிக்கக் கூடும். (2) விஷயம் அப்படியானால், அவளிடமிருந்து அசுத்த ஆவியைத் துரத்த அத்தனை நாட்கள் பவுல் காத்திருந்தது ஏன்? ஒருவேளை அதன் விளைவுகளைப் பவுல் முன்னதாகச் சிந்தித்திருக்கலாம் (வ. 19). அந்தப் பெண் விலைமதிப்புள்ள ஒரு சொத்தாக இருந்தாள். அவர் அந்த அசுத்த ஆவியைத் துரத்தினால் அவளுடைய முதலாளிகளின் கண்களில் அச்செயலானது விலைமதிப்புள்ள சொத்தை அழிப்பதாகக் காணப்படும்.*

*பவுலின் எண்ணச் செயல் முறைகள் எதுவாயிருந்தாலும், கடைசியில் அவர் அந்தப் பெண்ணின் மேல் பரிதாபப்பட்டார். அவர் அந்த ஆவியை வெளியேறும்படிக்கு இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே கட்டளையிட்டார் - "அந்நேரமே அது புறப் பட்டுப் போயிற்று." அப்பெண் எப்படி உணர்ந்திருப்பாள் என்று உங்களால் கற்பனை செய்ய முடிகின்றதா? அநேக ஆண்டுகளாக, அவள் அந்தகார ஆவி ஒன்றின் கைதியாக இருந்திருந்தாள்; இப்பொழுதோ அவள் விடுதலையானாள்! அநேக ஆண்டுகளாக அவளது மனமானது தீமையின் விளையாட்டுக் களமாக இருந்திருந்தது; இப்பொழுதோ அவள் தனது சரியான மனநிலையில் இருந்தாள் (மாற். 5:15)! அவள் என்னவானாள் என்று அறிய நான் விரும்புகின்றேன். இதற்கு முன்பு தான் பேசிய சத்தியங்களின்படி செயல்பட்டு அவள் ஒரு கிறிஸ்தவளானாள் என்று நினைக்க நான் விரும்புகின்றேன். ஆயினும் லூக்கா உடனடியாக கவனத்தை அவளிடமிருந்து அவளுடைய எஜமான்களை நோக்கித் திருப்பினார் (வ. 19). இருந்த போதிலும், அவளது வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றத்தை நாம் கண்டிருக்கின்றோம்.*

*வசனம் 19, "அவளுடைய எஜமான்கள் தங்கள் ஆதாயத்து நம்பிக்கை அற்றுப் போயிற்றென்று கண்டு, ..." என்று*

தொடங்குகின்றது. லூக்கா இவ்விடத்தில் சொல்லாடல் ஒன்றைப் பயன்படுத்தினார்: வசனம் 18ல் ‘‘புறப்பட்டுப் போயிற்று’’ என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள அதே கிரேக்க வார்த்தை மூலவசனப் பகுதியில் வசனம் 19ல் ‘‘அற்றுப் போயிற்று’’ என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அசுத்த ஆவி அகன்ற போது அவர்களின் ஆதாயமும் அற்றுப் போனது என்பதே லூக்கா இவ்விடத்தில் கூறுவதன் நேரடி அர்த்தம் ஆகும். ஒரு மனிதரை உங்கள் எதிரியாக்கிக் கொள்ள வேண்டு மென்றால், அவரது ஆதாயம் வரும் வழியை இடையூறு உண்டாக்கினாலே போதும்.

அந்த அடிமைப் பெண்ணின் எஜமானர்கள், ‘‘பவுலையும் சீலாவையும்[5] பிடித்து, சந்தை வெளியிலுள்ள (கிரேக்கம்: *agoran*) அதிகாரிகளிடத்தில் இழுத்துக் கொண்டு போனார்கள்’’ (வ. 19ஆ). ‘‘சந்தை வெளி’’ என்பது நகரச் சதுக்கம் ஆகும், இவ்விடத்தில் கற்கள் பாவப்பட்ட மிகப் பரந்த அளவிலான மேடையைச் சுற்றிலும் உயர்ந்த தூண்களும், சலவைக்கல் கட்டிடங்களும், கடைகளும், கோவில்களும் நிறைந்திருந்தன. கிரேக்கர்கள் இதை ‘‘அகோரா’’ (the agora) என்று அழைத் தார்கள்; ரோமானியர்கள் இதை ‘‘ஃபோரம்’’ (the forum) என்று அழைத்தார்கள். இதன் ஒரு புறத்தில் சலவைக் கல்லினால் ஆன நீண்ட மேடையொன்று இருந்தது, (கிரேக்கம் : *bema*) இது உரை நிகழ்த்துதல் மற்றும் கொண்டாட்டங்கள் ஆகியவற்றிற்குப் பயன் படுத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சியின் போது இது நியாயாசனமாகப் பயன்பட்டது. (இந்த மேடைக்குரிய கிரேக்க வார்த்தை *bema* என்பதாகும் (18:12க்கான குறிப்புகளைக் காணவும்). பிலிப்பியில் இருந்த *bema*வானது அகழ்ந்தெடுக்கப் பட்டுள்ளது, இது *agora*வின் வடக்கு திசையில் இருக்கின்றது.

‘‘அவர்கள் அதிகாரிகளிடத்தில் ஒப்புவித்து’’ (வ. 20அ), அடிமையின் எஜமானர்கள், பவுலையும் சீலாவையும் தங்கள் குடிமக்கள் கைது செய்ததற்கான உண்மையான காரணமாகிய தங்கள் பொருளாதார நஷ்டம் என்பதை கூறவில்லை, அதற்குப் பதிலாக, ‘‘யூதர்களாகிய இந்த மனுஷர் நம்முடைய பட்டணத்தில் கலகம் பண்ணி, ரோமராகிய நாம் ஏற்றுக் கொள்ளவும் அநுசரிக்கவும் தகாத முறைமைகளைப் போதிக் கிறார்கள் என்றார்கள்’’ (வ. 20ஆ, 21). பவுலையும் சீலாவையும்

*குற்றம் சாட்டியவர்கள், "வல்லமையான உணர்வுப் பூர்வமான மூன்று விசைகளை இழுத்தார்கள்: (1) யூதருக்கெதிர்வாதம்[6] ('இந்த மனிதர்கள் யூதர்கள்'), (2) ஒழுங்கும் கிரமமும் ('இவர்கள் நம்முடைய பட்டணத்தில் கலகம் பண்ணுகின்றார்கள்'), மற்றும் (3) நாட்டுப்பற்று[7] ('ரோமருக்கேற்காத முறைமை களைப் போதிக்கின்றார்கள்') என்று* Ken. R. Durham *விளக்கமளிக்கிறார்.*

*சந்தை வெளியில் நடக்கும் ஒரு விசாரணையானது மக்களை எப்பொழுதுமே கவர்ந்திழுக்கும் (17:5க்கான குறிப்புகளைக் காணவும்). இதைக் கவனிப்பவர்கள் கலகம் பண்ண வேண்டும் என்றே இக்குற்றச்சாட்டு கணக்கிடப் பட்டது, அவர்கள் விரும்பிய விளைவு ஏற்பட்டது, "அப்பொழுது ஜனங்கள் கூட்டங்கூடி, அவர்களுக்கு [பவுல் மற்றும் சீலாவுக்கு] விரோதமாய் எழும்பினார்கள்" (வ. 22அ). கூட்டத்தை சாந்தப்படுத்தவும் ஒருவேளை ஒரு கலகத்தைத் தவிர்க்கவும், "அதிகாரிகள் அவர்கள் [பவுல் மற்றும் சீலாவின்] வஸ்திரங்களைக் கிழித்துப் போடவும், அவர்களை அடிக்கவும் சொல்லி" (வ.22ஆ).*

*வசனம் 35 மற்றும் 38ல் "சேவகர்கள்" என்று அழைக்கப் பட்டவர்கள்தான் இவர்களை அடித்திருக்க வேண்டும்.* (KJV) *"சேவகர்" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தை யானது "தடிகாரர்" என்ற நேரடியான அர்த்தம் கொண்ட தாகும்.* Lictors *என்று ரோமர்கள் அழைத்த இம்மனிதர்கள் எப்பொழுதும் அதிகாரிகளுடனே செல்பவர்களாகவும், தங்களுடன் சிவப்புக் கயிற்றால் கட்டப்பட்ட ஒரு கத்தை மரத்தடிகளை எடுத்துச் செல்பவர்களாகவும் இருந்தார்கள். இந்தத் தடிகள் கட்டை விரல் பருமன் கொண்டவை. இத்தடி களின் நடுவில் கோடரி ஒன்று இருக்கும்.[8] இந்தக் கத்தையானது ரோம அதிகாரத்தின் அடையாளத்தைப் பிரநிதித்துவப்படுத்து வதாகவும், நடைமுறையில் உடனடியாக ரோம நியாயத்தை செயல்படுத்துவதாகவும் இருந்தது. அமெரிக்க நாட்டின் பத்து சென்ட் நாணயத்தின் பின்பகுதியில் அநேக ஆண்டுகளாய் இந்த அடையாளம் காணக்கூடியதாய் இருந்தது. முசோலினியால் இத்தாலியில் இச்சின்னம் பயன்படுத்தப்பட்டது.*

*ரோமானிய அடிக்கும் முறையில், தண்டிக்கப் படுபவ*

ருடைய உடலில் இருந்து உடைகள் உரியப்படும். முதுகானது எப்பொழுதும் வெளிப்படுத்தப்படும்; பெரும்பாலும் குற்றவாளி நிர்வாணமாக்கப்பட்டு, தலைமுதல் கால் வரை தடியால் அடிக்கப்படுவார். யூதர்களின் கசையடியானது முப்பத்தியொன்பது அடிகள் என்று அளவுக்கு உட்படுத்தப் பட்டிருந்தது (2 கொரி. 11:24); ரோமானிய அடிக்கும் முறையில், அடிகளின் எண்ணிக்கையானது பொறுப்பு அதிகாரியின் விருப்பத்திற்கு உட்பட்டதாகும். லூக்கா, "அவர்கள் [பவுல் மற்றும் சீலாவை] அநேக அடிகள் அடித்த பின்பு" (வ. 23) என்று மட்டும் கூறினார்.

ரோமக் குடிமகன் ஒருவரை அடித்தல் என்பது சட்ட விரோதமானதாகும் என்பதைக் குறிப்பிட வேண்டும். சிசெரோ என்பவர், "ரோமக் குடிமகனைக் கட்டி வைத்தல் என்பது ஒரு தவறான செயலாகும், அவரைத் துன்புறுத்துவது ஒரு குற்றம், அவரை மரணத்துக்குள்ளாக்குவதென்பது மதிப்பு மிக்க ஒருவரைக் கொலை செய்யும் குற்றமாகும்" என்று கூறினார் என்று J.W. மெக்கார்வி விளக்கப்படுத்துகிறார். பிறகு ஏன் பவுலும் சீலாவும் தங்களின் ரோமானியக் குடியுரிமை பற்றி அதிகாரிகளிடத்தில் கூறி (16:37) தண்டனையில் இருந்து தப்பித்துக் கொள்ளவில்லை? ஒருவேளை அவர்கள் முயற்சி செய்திருக்கலாம், ஆனால் அதிகாரிகள் அதைக் கேட்கக் கூடாமல் போயிருக்கும்; அங்குதான் கூச்சலும் குழப்பமுமான சூழ்நிலை இருந்ததே.

இந்த அடித்தலைக் குறித்துக் கொள்ளுங்கள்; இது விசேஷ மாய்க் குறிப்பிடத் தக்கதாகும், ஏனென்றால் புறஜாதியாரால் கிறிஸ்தவர்கள் மேல் தூண்டி விடப்பட்ட முதல் உபத்திரவம் இதுவேயாகும்.

## பயபக்தியற்ற ரோமச் சிறைச்சாலை அதிகாரி (16:23-40)

***சிறைச்சாலை (23, 24)*** [Prison]

''அவர்களை அநேக அடிகள் அடித்த பின்பு, சிறைச் சாலையிலே வைத்து அவர்களைப் பத்திரமாய்க் காக்கும்படி

சிறைச்சாலைக்காரனுக்குக் கட்டளையிட்டார்கள்" (வ. 23). இவ்விதமாய் அதிகாரம் 16ல் ஆண்டவரால் வாழ்க்கையில் மாற்றம் பெற்ற மூன்றாவது நபரிடத்தில் நாம் அறிமுகப் படுத்தப்படுகின்றோம். ஓய்வு பெற்ற படை வீரர்களை குடியேற்றப் பட்டணங்களில் சென்று வாழும்படி அனுப்புவது ரோமாபுரியின் பழக்கமாயிருந்தது, ஆகவே இந்தச் சிறைச் சாலைக்காரர் ரோமப்படையிலிருந்து ஓய்வு பெற்றவரா யிருக்கலாம் என்று சிலர் யூகிக்கின்றார்கள். இவர், பிலிப்பி பட்டணத்தில் உள்ள துணிவு மிக்க நடுத்தர வர்க்கத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்றவராய் இருக்கின்றார். இவரை நான் "பயபக்தியற்ற ரோமச் சிறைச்சாலை அதிகாரி" என்று அழைக்கின்றேன் ஏனென்றால், இவர் பூமியதிர்ச்சியினால் எழுப்பப்படும் வரைக்கும், ஆவிக்குரிய விஷயங்களில் ஆர்வம் காட்டியதாகச் சான்று எதுவும் இல்லை.

"அவர்களை [பவுல் மற்றும் சீலா ஆகியோரை] ப் பத்திர மாய்க் காக்கும்படி" சிறைச்சாலை அதிகாரிக்கு கூறப்பட்டது. இந்தக் கட்டளையை நிறைவேற்றுவதில் அவருக்கிருந்த அதிகப்படியான வைராக்கியமானது, அவர் விகாரமான இயல்பின் உணர்வு பெற்றிருந்தார் என்பதில் சுட்டிக்காட்டப் படலாம். "அவன் இப்படிப்பட்ட கட்டளையைப் பெற்று, அவர்களை உட்காவலறையிலே அடைத்து'' (வ. 24அ). உட்காவலறை என்னும் இடமானது தூய்மையான காற்றோ, வெளிச்சமோ இல்லாத இடமாகும்; அது மிகவும் கடினமான மற்றும் அபாயமான குற்றவாளிகளுக்கு உரிய இடமாகும். இருளும், ஈரக்கசிவும், அழுக்கும், எலிகளின் தொந்தரவும் நிறைந்த இருட்டறைக்குள் தவறெதுவும் செய்யாத நிலையில் நீங்கள் அடைக்கப்படுவதை நினைத்துப் பாருங்கள். ஆயினும், அந்தச் சிறையதிகாரி அந்தக் காவல் ஏற்பாடுகளிலும் கூடத் திருப்தியடைந்து விடவில்லை. அவர் "அவர்கள் கால்களைத் தொழுமரத்தில் மாட்டி வைத்தான்" (வ. 24ஆ). குற்றவாளிகள் தரையில் உட்கார வைக்கப்பட்டு, அவர்களின் கால்களை முடிந்த அளவுக்குப் பரப்பி வைக்கச் செய்து, பின்பு அவர்களின் பாதங்களைத் தொழுமரத்துடன் இணைத்து வைப்பதுண்டு. கால்களைத் தொழுமரத்தில் மாட்டி வைப்பது என்பது கட்டி வைக்கும் ஒரு வகையாக மட்டுமல்ல, சித்திரவதைப் படுத்தும்

ஒரு கருவியாகவும் இருந்தது, அந்தச் சிறையதிகாரி இராணுவத்தில் இருந்தபோது, வேறு எவைகளைக் கற்றிருந் தாலும், அவர் இரக்கத்தைக் கற்றிருக்கவில்லை.

பவுலும் சீலாவும் வருத்துகின்ற இருளில் அமர்ந்து, தங்கள் பாதங்கள் சிறைப்பட்ட நிலையில், கால்களில் தசையிறுக்கமும், பிடிப்பும் ஏற்படத் தொடங்க, தங்கள் முதுகுகளில் அடிபட்ட காயங்கள் இருந்ததினால் பின்னால் சாயவும் முடியாத நிலையில் (வ. 33) வேதனையுடன் இருந்தார்கள். இந்த அல்லலும் வேதனையும் பவுலின் ஆத்துமாவைச் செதுக்கின. பின்னாளில் அவர் தாம் மிலாறுகளால் அடியுண்டதையும் (2 கொரி. 11:25)[9] பிலிப்பியில் தமது உபத்திரவங்கள் மற்றும் கடினமாய் நடத்தப்பட்டது (1 தெச. 2:2) பற்றியும் எழுதினார்.

நேரம் மெதுவாக, மிகவும் மெதுவாக நகர்ந்தது, இரவுப் பொழுது வந்தபோது, சிறைச்சாலை அதிகாரி நித்திரையடையச் சென்றார், அவர் தமது சிறைக் கைதிகளின்மேல் காட்டிய கடினமான செயல்களால் எழுந்த எந்த விதமான முறுமுறுப்பு களாலும் தொந்தரவடையாத ஆழ்ந்த உறக்கம் கொண்டிருந் தார். பவுலுக்கும் சீலாவுக்கும் மிகுந்த உபத்திரவமானது நீண்ட நாள் போல் தோன்றியது, அதன் பிறகு நள்ளிரவு நேரம் வந்தது.

**துதி *(வ. 25)*** [Praise]

நீங்களும் நானும் இவ்விதமாய் நமது முதுகுகள் காயப்பட்ட நிலையில், நமது கால்கள் தொழுமரத்தில் கட்டி வைக்கப்பட்ட நிலையில், உட்காவலறையில் அடைக்கப் பட்டால் எப்படியிருக்கும்? - நள்ளிரவு நேரத்தில் நாம் என்ன செய்து கொண்டிருப்போம்? கதறிக் கொண்டிருப்போமா? முறுமுறுத்துக் கொண்டிருப்போமா? லூக்கா, "நடுராத்திரியிலே பவுலும் சீலாவும் ஜெபம் பண்ணி, தேவனைத் துதித்துப் பாடினார்கள்"[10] (வ. 25அ) என்று எழுதினார். பவுலும் சீலாவும் கட்டிவைக்கப்பட்டதால் விடுதலைக்காகக் கதறினார்கள் என்று எண்ண வேண்டாம். அவர்கள் தங்களின் கடினமான சூழ்நிலையிலும் கூட பாடல்கள் பாடினார்கள். எல்லாம் நல்ல விதத்தில் நடைபெறும்போது எவரொருவரும் தேவனைத் துதித்துப் பாடல்களைப் பாட முடியும்; எல்லா விஷயமும் எதிராக நடக்கும்போது தேவனைத் துதித்துப் பாடல்கள்

*பாடுவதற்கு விசுவாசம் தேவைப்படுகின்றது.*[11] *பின்னாளில் பவுல், எபேசுவில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு, "... கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணி ... எப்பொழுதும் எல்லாவற்றிற் காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரித்து, ..." (எபே. 5:19, 20) என்று அறைகூவல் விடுகின்றார். பவுல் இந்தப் பண்பைப் பிலிப்பி பட்டணத்தின் சிறைச்சாலையில் செயல்முறையில் விளக்கப்படுத்தினார்.*

*''காவலில் வைக்கப்பட்டவர்கள் அதைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்'' (வ. 25ஆ) என்று லூக்கா குறிப்பிடுகிறார். காவலில் வைக்கப்பட்டிருந்த மற்ற கைதிகள் சந்தேகத்திற் கிடமில்லாமல் உட்காவலறையிலிருந்து அழுகையையும் சபித்தலையும் கேட்டிருக்கிறார்கள்; ஜெபிப்பதையும் துதிப்பதையும் இதற்கு முன் கேட்டிருந்ததில்லை.*

***வல்லமை (வ. 26-30)*** [Power]

*நள்ளிரவு இசை நிகழ்ச்சியானது, ''சடிதியிலே சிறைச் சாலையின் அஸ்திபாரங்கள் அசையும்படியாகப் பூமி மிகவும் அதிர்ந்தது'' (வ. 26அ) என்ற சம்பவத்தினால் இடைமறிக்கப் பட்டது. பிலிப்பி பட்டணமானது பூமி அதிர்ச்சி எல்லைகளில் அமைந்திருந்தது. இது ரிக்டர் அளவையில் எவ்வளவாய் பதிவாகக் கூடும் என்பதை நான் அறியவில்லை, ஆனால் சிறைச்சாலையின் அஸ்திபாரங்கள் அசையும்படியான தென்பதால் இது ''மாபெரும்'' பூமியதிர்ச்சியாகவே இருந் திருக்க வேண்டும். கதவுகளை விசிறியடித்து, சுவர்களில் விரிசல் உண்டாக்கி, கைதிகளின் பாதங்களைத் தொழுமரத்தில் பிணைத்திருந்து கட்டுகளை அவிழ்க்குமளவுக்கு இப்பூமி யதிர்ச்சி மிகவும் வன்மையானதாய் இருந்தது. ''உடனே கதவுகளெல்லாம் திறவுண்டது; எல்லாருடைய கட்டுகளும் கழன்று போயிற்று'' (வ. 26ஆ). இப்பூமியதிர்ச்சியானது ஒரு இயற்கையான விளைவாக இருக்கலாம் அல்லது இல்லாமல் இருக்கலாம்,*[12] *ஆனால் சிறைச்சாலையில் இருந்த எவரும், அது இரவில் பாடிய பாடல்களுக்கு ஒரு பதிலுரையாக பரலோகத் திலிருந்து அனுப்பப்பட்டது என்பதை சந்தேகித்திருக்க மாட்டார்கள்.*

*பூமியதிர்ச்சியானது சிறைக்காவலரை ஆழ்ந்த உறக்கத்*

திலிருந்து எழுப்பியது. அவர் குதித்தெழுந்து நின்று, மங்கிய வெளிச்சத்தின் வழியே, சற்றே திறந்திருந்த சிறைச்சாலைக் கதவுகளைக் கண்டார். "சிறைச்சாலைக்காரன் நித்திரை தெளிந்து, சிறைச்சாலையின் கதவுகள் திறந்திருக்கிறதைக் கண்டு, கட்டுண்டவர்கள் ஓடிப்போனார்களென்று எண்ணி, பட்டயத்தை உருவித் தன்னைக் கொலை செய்து கொள்ளப் போனான்" (வ.27). கைதியைக் காவல் செய்யும் ஒருவர் அக்கைதியைத் தப்பிச் செல்லும்படி விட்டுவிட்டால், அக்கைதி பெறவேண்டிய தண்டனையைக் கைதியைக் காவல் பண்ணியவர் அனுபவிக்க வேண்டும் (12:19) என்று ரோமானியச் சட்டமானது கட்டளையிட்டிருந்தது. அந்தச் சிறைச்சாலையில் இருந்தவர்களில் ஒன்றிரண்டு பேராவது மரண தண்டனை நிறைவேற்றப்பட வேண்டிய கைதிகளாய் இருந்திருப்பார்கள். அவர்கள் தப்பியிருந்தால், அவர்களுக்குப் பதில், தான் கொலை செய்யப்படுவோம் என்று சிறைச்சாலை அதிகாரி நினைத்திருக்கலாம். எனவே "மரியாதைக்குரிய தப்பும் வழி" என்று தற்கொலை செய்து கொள்ள அந்தச் சிறைச்சாலைக்காரர் முடிவு செய்திருக்கலாம்.

இது தேவ நம்பிக்கையற்றவர்களின் தத்துவம் என்பதையும், இது வேதாகம ரீதியான ஒரு தத்துவமல்ல என்பதையும் புரிந்து கொள்ளுங்கள். தற்கொலை செய்து கொள்வதென்பது தேவனுடைய மக்களுக்கு ஒரு பொழுதும் "மரியாதைக்குரிய தப்பும் வழியாக" இருப்பதில்லை. மரணத்தின் வாசலைத் தவிர மற்ற வாசல்கள் எல்லாம் அடைபட்டுப் போனதென்று நம்புவதாலேயே மக்கள் தற்கொலை செய்து கொள்கின்றார்கள் என்று மனவியல் அறிஞர்கள் கூறுகின்றார்கள். இருந்த போதிலும், தேவனுடைய பிள்ளைகள் தங்களின் சூழ்நிலை எவ்வளவு மோசமானாலும், அவர்கள் "சோதனையைத் தாங்கத்தக்கதாக" தேவன் எப்பொழுதுமே "தப்பிக் கொள்ளும்படியான போக்கையும்" உண்டாக்குவார் (1 கொரி. 10:13) என்று அறிந்துள்ளனர்.

அந்தச் சிறைச்சாலை அதிகாரி பட்டயத்தை உருவி தன்னை மார்பில் குத்திக் கொள்ளப் போகையில், "பவுல் மிகுந்த சத்தமிட்டு: 'நீ உனக்குக் கெடுதி ஒன்றுஞ் செய்து கொள்ளாதே; நாங்கள் எல்லாரும் இங்கேதான் இருக்கிறோம்' என்றார்"

(வ. 28) சிறையதிகாரியால் இதை எளிதில் நம்ப முடிய வில்லை. அவர், "தீபங்களைக் கொண்டு வரச் சொல்லி உள்ளே ஓடினார்" (வ. 29அ), தாமே சென்று பார்க்கும்படி அப்படிச் செய்தார். அவர் திகைப்படையும்படியாகப் பவுலின் வார்த்தைகள் உண்மையாகவே இருந்தன. மேற்கத்திய வசனமானது, சிறையதிகாரி உடனடியாக ''மற்ற கைதிகளைக் காவல் பண்ணினார்" என்று கூறுகின்றது. பிறகு அவர் பவுல் மற்றும் சீலாவினிடத்தில் "நடுநடுங்கி" திரும்பி அவர்களின் முன்பாகக் கீழே விழுந்தார் (வ. 29ஆ). அந்தச் சிறைச்சாலையைக் காட்டிலும் அவரது ஆத்துமாவானது அதிகமாய், வன்மையாய் அசைக்கப்பட்டிருந்தது. பவுலும் சீலாவும், அவரது பாதுகாப்பில் ஒப்படைக்கப்பட்டிருக்கையில் அவர்கள் சிறிய தொந்தரவு கொடுப்பவர்களாக, அற்பமான குற்றவாளிகளாக, ஒரு பாடம் போதிக்கப்பட வேண்டியவர்களாக இருந்தார்கள். இப்பொழுதோ நாடகம் போல் வரிசையாய் நடந்த நிகழ்ச்சிகள் யாவும், அம்மனிதர்கள் தான் எப்பொழுதும் அறிந்ததைக் காட்டிலும் அதிக வல்லமையான படையொன்றைக் கட்டுப்படுத்தியதாக அந்தச் சிறையதிகாரியை நம்பச் செய்தன.[13]

அவர் "அவர்களை வெளியே அழைத்து" (வ. 30அ) வந்தார், உறுதியாகவே அவர் தமது சொந்த வீட்டிற்கு அவர்களை அழைத்து வந்திருப்பார் (வ. 32). அதன்பின் அவர்களிடம், "இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?'' (வ. 30ஆ) என்று கேட்டார். அவருடைய வார்த்தைகளானது அநேக கேள்விகளை எழுப்புகின்றன: எடுத்துக்காட்டாக, "இரட்சிக்கப்படுதல்'' என்பதில் சிறையதிகாரி மிகச் சரியாக அர்த்தப் படுத்தியது என்ன? நம்மைப் போல அவர் ''இரட்சிக்கப்படுதல்'' என்ற வார்த்தைக்குரிய வேத வசன போதனையைப் போதிய அளவுக்கு அறிந்திருந்தாரா? அல்லது இது வெறுமே தேவ நம்பிக்கையற்ற ஒரு மனிதரின் புகலற்ற கதறலாயிருந்ததா? அல்லது ஊழியக்காரர்களின் அதிகாரமுடைய வல்லமைக்குப் பயந்து, அவர்களைத் தவறாய் நடத்தியதால் ஏற்படக் கூடிய பின் விளைவுகளில் இருந்து தன்னைக் காத்து(இரட்சித்து)க் கொள்ள விரும்பியதால் உண்டான கதறலாயிருந்ததா?

மற்றும், இச்சிறையதிகாரி இரட்சிப்பைப் பற்றிய சரியான

*கருத்துடையவராயிருந்தால், பவுலும் சீலாவும் பதில் கொடுக்க முடியும் என்று அவர் எண்ணியதேன்? அவர்கள் பிரசங்கித்த செய்தியானது முன்னதாகவே அவர் காதுகளுக்கு எட்டியிருந்ததா? பவுலையும் சீலாவையும் சிறைச்சாலைக்குக் கொண்டு வந்தவர்கள், அவர்களை அடிமைப் பெண் "உன்னதமான தேவனுடைய ஊழியக்காரர்; இரட்சிப்பின் வழியை நமக்கு அறிவிக்கிறவர்கள்" (வ. 17) என்று கூறியதைச் சிறையதிகாரிக்குக் கூறியிருந்தார்களா? அவர் பவுலையும் சீலாவையும் தொழுமரத்தில் கட்டி வைக்கும்போது அவர்கள் அவரிடத்தில் ஏதேனும் கூறியிருந்தார்களா? அவர் வெறுமே தமது உள்ளுணர்வினால் இந்த மனிதர்கள் தமக்கு உதவி செய்ய முடியும் என்று அறிந்தாரா? சில விடைகளைத் தர நம்மால் முடியாது, ஆனால் பின்வருவது தெளிவு: பயபக்தியற்ற சிறையதிகாரி தமது இருதயத்தில் அசைக்கப்பட்டார். அவர் மரணத்தின் விளிம்பில் நின்று கொண்டு, மையிருட்டை உற்றுப்பார்த்தார், அவர் கண்டகாட்சி அவரைக் கலங்கிப் பயப்படச் செய்தது! அவர், "இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?" என்று கதறினார்.*

***பிரசங்கித்தல் (வ. 31)*** [Preaching]

*அவர் வார்த்தைகளில் எதை அர்த்தப்படுத்தியிருந்தாலும், அவைகள் (அவ்வார்த்தைகள்) பவுலுக்கும் சீலாவுக்கும் சிறந்த ஒரு திறப்பை ஏற்படுத்தின. "அதற்கு அவர்கள்: 'கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்' என்று சொல்லி" (வ. 31). ஆலோசனைச் சங்கத்தின் முன்பாக நின்றபோது கிறிஸ்துவில் மட்டுமே இரட்சிப்பு காணப்படுகின்றது என்பதைப் பேதுரு வலியுறுத்தியிருந்தார், "அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" (4:12). சிறையதிகாரி இரட்சிக்கப்படுவாரென்றால், அது இயேசுவின் மூலமாகவே இருக்கும்.*

*சில வேளைகளில் மக்கள், பெந்தெகொஸ்தே நாளன்று என்ன செய்ய வேண்டும் என்று யூதர்கள் கேட்ட பொழுது*

*(2:37)* அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட அதே பதிலானது சிறை யதிகாரிக்குக் கொடுக்கப்படாதது ஏன் என்று வியப்படைகின் றார்கள்: "நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" (2:38). சிலர், சவுல் "ஆண்டவரே நான் என்ன செய்ய வேண்டும்?" (22:10) என்று கேட்ட கேள்விக்குத் தரப்பட்ட பதில் இங்கு தரப்படாதது ஏன் என்று கேட்கலாம்: "நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு" (22:16). பெந்தெகொஸ்தே நாளன்று யூதர்களுக்கும், பின்பு சவுலுக்கும் கொடுக்கப்பட்ட பதில்களை மறுபடியும் கவனியுங்கள்: "நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொரு வரும் பாவமன்னிப்புக்கென்று *இயேசு கிறிஸ்துவின் நாமத் தினாலே* ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" (2:38); "... நீ எழுந்து *கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு*, ஞானஸ்நானம் பெற்று உன் பாவங்கள் போகக் கழுவப்படு" (22:16). இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே சிலவற்றைச் செய்வது அல்லது இயேசுவின் நாமத்தைத் தொழுது கொள்வது என்பது ஒருவர் இயேசுவை அறிந்து அவரில் விசுவாசம் கொண்டிருக்கிறார் என்பதை முன் அநுமானம் செய்கின்றது. சிறையதிகாரியிடம் அந்த அறிவு இருந்திருக்கவில்லை; அவரிடத்தில் அந்த விசுவாசம் காணப்படவில்லை. அவரிடத்தில் "கிறிஸ்துவின் நாமத்தில்" சிலவற்றைச் செய்யும்படி கூறப்பட்டிருந்தால், யோவான் 9:36ல் வரும் பார்வையற்ற மனிதரைப் போல இவரும், "... அவரிடத்தில் நான் விசுவாசமாயிருக்கும்படிக்கு அவர் யார்?" என்று கேட்டிருந்திருப்பார்.

**மன்னிப்பு (வ. 32-34)** [Pardon]

பவுலும் சீலாவும் விரைவிலேயே சிறையதிகாரியின் அறிவுக் குறைபாட்டைத் திருத்தியமைத்தார்கள். "அவனுக்கும் அவன் வீட்டிலிருந்த யாவருக்கும் கர்த்தருடைய வசனத்தைப் போதித்தார்கள்" (வ. 32). "ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்" (ரோமர்

*10:17). ''கர்த்தருடைய வசனம்'' என்பது அநேகமாக உண்மையான தேவனைப் (வ. 34) பற்றிய ஒரு "வசனத்தையும்" உள்ளடக்கியதாகவே இருந்திருக்கும். அது நிச்சயமாகவே இயேசுவையும் சிலுவையையும் பற்றிய ஒரு ''வசனத்தை'' உள்ளடக்கியிருந்தது. அது, இயேசுவின் பலியினால் நாம் பயன்பெறுவது எப்படி என்ற ஒரு "வசனத்தையும்" அதைத் தொடர்ந்த வாழ்க்கை எவ்விதம் இருக்க வேண்டும் என்பது பற்றிய ஒரு ''வசனத்தையும்'' கூட உள்ளடக்கியிருந்தது என்பதற்குத் தொடர்ந்து வரும் வசனங்கள் சாட்சியாகின்றன. ''மேலும் இராத்திரியில் அந்நேரத்திலேதானே அவன் [சிறைச்சாலை அதிகாரி] அவர்களை அழைத்துக் கொண்டு போய் அவர்களுடைய காயங்களைக் கழுவினான். அவனும் அவனுடையவர்கள் அனைவரும் உடனே ஞானஸ்நானம் பெற்றார்கள்"[14] (வ. 33). சிறையதிகாரி உடனடியாகப் பதில் செயல் செய்தார் என்ற உண்மையானது அவரது மனமார்ந்த நடக்கைக்கு ஆதாரமாகும்; அவர் அவர்களுடைய காயங் களைக் கழுவினார் என்ற உண்மையானது அவரது மனவருத்தத் திற்கு ஆதாரமாகும்; அவர் ஞானஸ்நானம் பெற்றார் என்ற உண்மையானது அவரது கீழ்ப்படிதலுக்கு ஆதாரமாகும்.*

*சிறையதிகாரியும் அவரது வீட்டாரும் எங்கே நீரில் அமிழ்த்தப்பட்டார்கள் என்பதை நாம் அறியவில்லை. அது ஒருவேளை அருகில் இருந்த சிறு குளத்தில் நடைபெற்றிருக் கலாம், அல்லது அவர்கள் நகருக்கு வெளியே கேங்கிட்டஸ் ஆற்றங்கரைக்குச் சென்றிருக்கலாம்.[15] ஞானஸ்நானத்திற்குப் பிறகு, சிறையதிகாரி, "... அவர்களைத் [பவுலையும் சீலவையும்] தன் வீட்டிற்குக் கூட்டிக் கொண்டு போய், அவர்களுக்குப் போஜனங் கொடுத்து,[16] தன் வீட்டார் அனைவரோடுங் கூடத் தேவனிடத்தில் விசுவாசமுள்ளவனாகி மனமகிழ்ச்சியா யிருந்தான்'' (வ. 34). முதலாவது சரீர மரணத்திலிருந்தும் இரண்டாவது ஆவிக்குரிய மரணத்திலிருந்தும், ஆக அவர் ஒரே இரவில் இரண்டு தரம் இரட்சிக்கப்பட்டிருந்தார்! உட்காவல றையில் பவுலும் சீலாவும் தொழு மரத்தில் கட்டி வைக்கப் பட்டிருந்ததைக் காட்டிலும் அதிக இறுக்கமான நிலையில் அவரது ஆத்துமா, பாவத்தில் சிறைவைக்கப்பட்டிருந்தது, ஆனால் இப்பொழுதோ அவர் விடுதலையானார்!*

வசனம் 34ல் "விசுவாசமுள்ளவனாகி" என்ற வார்த்தை யானது சிறையதிகாரியின் முழுமையான பதில்செயலை[17] பரந்த அளவில் குறிப்பிடப் பயன்பட்டது என்பதைக் கவனியுங்கள். அவர் விசுவாசித்தால் அவரும் அவரது வீட்டாரும் இரட்சிக்கப் படுவார்கள் என்று அவருக்குக் கூறப்பட்டது (வ. 31). அவருக்குக் கர்த்தருடைய வசனமானது போதிக்கப்பட்டிருந் தது. அவர் மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்ற பிறகு, அவர் விசுவாசமுள்ளவராயிருந்தார் என்பது வலியுறுத்தப்பட்டது.

நாமகரணக் கூட்டங்களின் பிரசங்கியார்கள் வசனம் 30ல் சிறையதிகாரியின் கேள்வியையும், வசனம் 31ல் உள்ள பதிலையும் மேற்கோள் காட்டி விட்டு அத்துடன் அந்த நிகழ்ச்சி முடிவடைந்து விட்டது என்பது போல நிறுத்திக் கொள்வது வழக்கமான செயலேயாகும்.[18] J.W. McGarvey கூறியது போல, அவர்கள் "மிகவும் சீக்கிரமாய்ச் சிறையை விட்டுப் புறப் படுகிறார்கள்." சிறையதிகாரியின் மனமாற்ற வரலாறானது அதன் நித்தியத்துவத்தில் பரிசோதிக்கப்படுகையில், நாம் இதுவரை படித்துள்ள மற்ற எல்லா எடுத்துக்காட்டுகளிலும் உள்ளதைப் போலவேதான் இவரும் தமது பாவங்களில் இருந்து இரட்சிக்கப்பட்டார் என்பது காணப்படும்: சுவிசேஷத்தில் அவர் போதிக்கப்பட்டார்; அவர் இயேசுவை விசுவாசித்தார்; அவர் தமது பாவங்களுக்காக மனந்திரும்பினார்; அவர் ஞானஸ் நானம் பெற்றார்.

***மறுப்பு (வ. 35-40)*** [Protest]

இவ்வரலாற்றின் முடிவானது கோணலான ஒரு நகைச் சுவையைப் பெற்றுள்ளது. "பொழுது விடிந்தபின்பு: 'அந்த மனு ஷரை விட்டுவிடுங்கள்' என்று சொல்ல அதிகாரிகள் சேவகர் களை [சிறையதிகாரியிடம்] அனுப்பினார்கள்" (வ. 35). அடி வாங்கியதும், ஓரிரவு சிறையில் அல்லல் பட்டதும் கலகக்கார யூதர் இருவருக்கும் தங்கள் நிலையை உணரப் போதுமான தாயிருந்திருக்கும் என்று அதிகாரிகள் நினைத்திருக்கலாம். நியாயாதிபதியினிடத்திலிருந்து வந்த சேவகர்களுடன் சிறையதிகாரி வந்து "பவுலுக்கு இந்த வார்த்தைகளை அறிவித்து: 'உங்களை விடுதலையாக்கும்படிக்கு அதிகாரிகள் கட்டளை அனுப்பினார்கள்; ஆகையால் நீங்கள் இப்பொழுது புறப்

பட்டுச் சமாதானத்துடனே போங்கள்' என்றான்" (வ. 36). அவர் பவுலையும் சீலாவையும் சிறையிலிருந்து "வெளிவரும்படி" அழைத்தார் என்றுள்ளதால், முந்தின இரவின் நிகழ்ச்சிகள் முடிந்த பிறகு, தங்களின் புதிய சகோதரருக்குச் சங்கடம் ஏற்படாதபடிக்கு பவுலும் சீலாவும் சிறைச்சாலையின் அறைக்குத் திரும்பியிருந்தார்கள் என்பது உறுதியாகும். கடும் சோதனையானது முடிந்து போனது பற்றிச் சிறையதிகாரி மகிழ்ச்சியடைந்திருக்க வேண்டும்.

இருந்தாலும் பவுல் சிறையறையிலிருந்து நகரவில்லை. "அவர் அந்த சேவகர்களைப் (மூல பாஷையில் இவர்கள் பவுலை அடித்திருந்த தடிகாரர்கள் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது) பார்த்து, 'ரோமராகிய,[19] எங்களை அவர்கள் நியாயம் விசாரியாமல் வெளியரங்கமாய் அடித்து, சிறைச்சாலையிலே போட்டார்கள்; இப்பொழுது இரகசியமாய் எங்களை விடுதலையாக்குகிறார்களோ? அப்படியல்ல, அவர்களே வந்து, எங்களை வெளியே அழைத்து அனுப்பி விடட்டும்' " (வ. 37) என்றார். ரோமக்குடிமகன் ஒருவரை அடிப்பதென்பது ஒரு பெரிய குற்றமாய் இருந்தது என்பதை ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம். இவர்களின் இந்த நடத்தை பற்றிய செய்தியானது ரோமாபுரிக்கு எட்டுமேயானால், நலமான வகையென்பது அந்த அதிகாரிகள் வேலை இழந்து போவதாகவும், மோசமான வகை என்பது அவர்கள் தங்கள் தலைகளை இழந்து போவதுமாயிருக்கும்.

சேவகர்கள் உடனடியாகத் திரும்பிச் சென்று "இந்த வார்த்தைகளை அதிகாரிகளுக்கு அறிவித்தார்கள். ரோமராயிருக்கிறார்களென்று அவர்கள் கேட்ட பொழுது பயந்து [அவர்களே சிறைச்சாலைக்கு] வந்து அவர்களுடனே தயவாய்ப் பேசி," (வ. 38, 39அ). RSVயில், "அவர்கள் வந்து இவர்களிடத்தில் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்கள்" என்று கூறப்படுகின்றது. NCVயில், "அவர்கள் வந்து பவுல் மற்றும் சீலாவிடம் தாங்கள் வருத்தப்படுவதாகக் கூறினார்கள்" என்று கூறப்படுகின்றது. பிறகு, "அவர்களை [சிறைச்சாலையை விட்டு] வெளியே அழைத்துக் கொண்டு போய், பட்டணத்தை விட்டுப் புறப்பட்டுப் போகும்படி கேட்டுக் கொண்டார்கள்" (வ. 39ஆ). இந்த முக்கியமான அதிகாரிகள் முழங்காலில் இருந்து, தங்கள்

முன் நெற்றியில் வியர்வை வழிந்தோட, பவுலும் சீலாவும் அமளி பண்ணாது பட்டணத்தை விட்டு வெளியேறும்படி வேண்டுகோள் விடுத்ததைச் சித்தரித்துக் காண முயற்சி செய்யுங்கள்!

இந்தக் காட்சியைக் கடந்து செல்லுமுன்னர், அதிகாரிகள் மேல் ஆழ்ந்த வெறுப்பைக் காட்டப் பவுல் தாம் ஒரு ரோமக் குடிமகனாயிருந்ததால் உண்டாயிருந்த உரிமைகளை வற்புறுத்தவில்லை என்பதை இவ்விடத்தில் நாம் வலியுறுத்தி யாக வேண்டும் (ரோமர் 12:17, 19). மாறாக, தாம் விட்டுச் செல்லவிருந்த புதிய கிறிஸ்தவர்களுக்காகப் பதிவை நேராக்க அவர் விரும்பினார். அவர்களைத் தோற்றுவித்தவர் (கிறிஸ்தவர் களாக்கினவர்) ஏன் கைது செய்யப்பட்டு, அடிக்கப்பட்டு, சிறையில் இடப்பட்டு - பிறகு திடீரென்று சந்தேகமான வகையில் பட்டணத்தை விட்டுப் புறப்பட்டுச் சென்றார் என்பதற்கு விளக்கம் தரக்கூடிய சங்கடமான சூழ்நிலையை அவர்களுக்கு வைத்துச் சென்றதால் அவர்கள் பிரச்சனைகளை எதிர்கொள்ள நேரிடும் (பிலி. 1:28-30). ஆனால் பவுல் எவ்வித விளைவுகளுமின்றி மீண்டும் அப்பட்டணத்திற்குச் செல்ல முடிந்தது (20:1, 2, 6).

அநேக வருடங்களினூடே நான் இந்த வரலாற்றைப் படிக்கும்போது, திகைப்படைந்திருக்கின்றேன். இந்த அதிகாரி கள் பவுலின் ரோமக்குடியுரிமை பற்றிய அவரது வார்த்தை களை மட்டுமே எடுத்துக் கொண்டது ஏன்? அவர்கள் அதற்கான ஆதாரத்தைப் பவுலிடம் கேட்கவில்லை என்பது உறுதி.[20] ஆதாரம் தேவைப்படவில்லையென்றால், தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக ஒவ்வொருவரும் தாங்கள் ரோமக்குடிமகன் என்று ஏன் உரிமை கோரவில்லை? மற்ற ஆராய்ச்சியானது எனக்கு பின்வரும் பரிசோதனைக்குட்பட வேண்டிய பதில்களைக் கொடுத்தது: தான் ஒரு ரோமக் குடிமகன் என்று பொய்யான உரிமைகோருதல் என்பது, ரோமக்குடிமகனைத் தவறாக நடத்துவதைக் காட்டிலும் மிகவும் தீவிரமான குற்றமாயிருந்தது. “ரோமக் குடிமகன் என்று பொய்யாக உரிமைகோரினால் அக்குற்றத்திற்கு மரண தண்டனை வழங்கப்பட்டது; இந்தக் கொடுமையான தண்டனையின் காரணமாக, வெகு அரிதாக ஒரு சிலர்தான்

*இவ்வகைப் பொய்யான உரிமைகோருதலை மேற்கொள்ள முடியும்" என H. லியோ போல்ஸ் விளக்கமளிக்கின்றார்.*

*எப்படியோ, பவுலும் சீலாவும் ஒரு புதிய களத்திற்குச் செல்லத் தயாரானார்கள், எனவே அதிகாரிகளின் வேண்டு கோளுக்கு இணங்குவதற்கு அவர்கள் சம்மதித்தார்கள் (இது அதிகாரிகளுக்கு நிம்மதியளித்திருக்கும் என்பது உறுதி). ஆயினும் அதை அவர்கள் அவசரமாய்ச் செய்யாமல், பெரு மிதத்துடன் செய்தார்கள். "அந்தப்படி அவர்கள் சிறைச்சாலை யிருந்து புறப்பட்டு லீதியாளிடத்திற்குப் போய்" (அப். 16:40அ). இவ்விடம்தான் அவர்களின் செயல்பாட்டு மையமாகவும், ஒருவேளை அவர்கள் ஆராதிக்கக் கூடிவரும் இடமாகவும் இருந்தது. இந்த சந்தர்ப்பத்தில், அநேக சகோதர சகோதரிகள் கூடியிருந்தார்கள்; ஒருவேளை அவர்கள் ஜெபம் செய்வதற் காகக் கூடியிருந்திருக்கலாம் (12:12ஐக் காணவும்). "[பவுலும் சீலாவும்] சகோதரரைக் கண்டு, அவர்களுக்கு ஆறுதல் சொல்லிப் போய்விட்டார்கள்'' (16:40ஆ). Coffman அவர்கள் இதை "வேதவசனத்தில் உள்ள மிக மிக நேர்த்தியான கூற்று" என்று அழைத்தார். உபத்திரவப் பட்டது அந்த நற்செய்தி ஊழியர்கள் இரண்டு பேரும்தான்; ஆயினும் அவர்கள் தங்களைக் குறித்துக் கவலைப்படாமல் எதிர்ப்பு சக்தியற்ற குழந்தைகள் போன்ற நிலையில் இருந்த புதிய கிறிஸ்தவர்களைப் பற்றியே கவலைப் பட்டார்கள். நிறைவாக, அவர்கள் விடை பெற்றுக் கொண்டு, "போய் விட்டார்கள்" (வ. 40இ). இவ்விதமாக ஒரு சபையானது நிலைநாட்டப்பட்டது - அடுத்து வந்த ஒவ்வொரு ஆண்டிலும் விலைமதிப்பற்ற தன்மையில் இச்சபையானது பவுலின் சிந்தையில் நிறுத்தப்பட்டுச் சிறப்பாக வளர்ச்சி பெற்றது (பிலி. 1:3-8; 4:1).*

## *முடிவுரை*

*நமது வேதபாடப்பகுதியை மறுபடியும் நினைத்துப் பார்க்கையில், வாழ்க்கையின் மாற்றம் பற்றிய அநேக பாடங் கள் சிந்தனைக்கு வருகின்றன: (1) தேவனுடைய உதவியின்றி வாழ்க்கையில் மாற்றங்கள் ஏற்பட முடியாது. (2) ஆயினும், நாம் தேவனோடு ஒத்துழைக்க முடியும், அதிலும் குறிப்பாக*

சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதில் ஒத்துழைக்க முடியும். (3) தேவன் நமது உடன் ஊழியராய் இருக்கின்றார் என்பதைப் புரிந்து கொண்டு, எப்பொழுதும் நாம் தைரியமாய் முன் செல்ல முடியும். இருப்பினும், ஒரு முக்கியமான பாடத்தை நான் வலியுத்த விரும்புகின்றேன்; எந்த சூழ்நிலையும் நம்பிக்கையற்ற தல்ல. நீங்களும் நானும் பிலிப்பி பட்டணத்தில் மாற்றக்கூடிய நபர்களைத் தேர்ந்து கொண்டிருந்தால், நமது பட்டியலில் அரைக்கிறுக்குப் பிடித்த அடிமைப் பெண்ணும், வக்கிரம் நிறைந்த சிறையதிகாரியும் உள்ளடங்கியிருக்க மாட்டார்கள்.

> *“The Discoverers என்ற புத்தகத்தில், தானியேல் பூரிஸ்டின் அவர்கள், போஜடார் முனையின் கதையைக் கூறுகின்றார்கள். அது ஆப்பிரிக்கக் கடலோரத்தில் அட்லாண்ட்டிக் கடலை நோக்கி நீளும் ஒரு சிறு நிலத்துண்டுதான், ஆனால் பதினைந்தாம் நூற்றாண்டில் எந்த ஒரு கப்பலும் அதைத் தைரியத்துடன் கடந்து செல்ல முயன்றதில்லை. போஜடார் முனையானது மற்ற அநேக முனைகளை விட அபாயமானதல்ல, ஆனால் அதற்கப் பால் என்ன உள்ளது என்பது பற்றிய பயங்கரமான வதந்திகள் அநேகம் பரப்பப்பட்டன - ஒருவேளை அது உலகத்தின் முடிவெல்லையாகக் கூட இருக்கலாம் என்றும் வதந்தி பரவியது. அந்த நாட்களின் மாலுமி களுக்கு அது ‘மனதில் ஒரு தடையாகவே’ இருந்ததென்று பூரிஸ்டின் கூறுகின்றார்கள்.”* - Durham,

நீங்களும், நானும் வாழ்க்கைகளை மாற்றுவதற்குத் தேடுகையில் நமது “மனதில் எவ்விதத் தடைகளும்” கொண்டிராமல் இருக்க வேண்டும். நாம் சுவிசேஷத்தை எல்லாருடனும் பகிர்ந்து கொள்ளுவோம்!

## பிரசங்கக் குறிப்புகள்

புரூஸ் ஒயிட் அவர்கள் அசுத்த ஆவிகொண்ட அடிமைப் பெண்ணுடைய வரலாற்றில், அவளது எஜமானர்களின் பேராசை மற்றும் பொருளாசையை மையமாக வைத்து (அச்சில்

*பதிப்பிக்கப்பட்டிராத) ஒரு தனிப் பிரசங்கத்தைப் பிரசங்கித்தார். (1) பொருளாசையானது சீரான நிலையைக் குலைக்கின்றது (அந்தப் பெண் நடத்தப்பட்ட விதம்), (2) பொருளாசையானது சத்தியத்தைச் சிதைக்கின்றது (பவுலையும் சீலாவையும் பற்றி அந்த எஜமானர்கள் கூறிய பொய்கள்) மற்றும் (3) பொருளாசையானது அநீதியை வேண்டி விரும்புகின்றது (பவுலும் சீலாவும் நடத்தப்பட்ட விதம்). நாம் பொருளாசையைக் குறித்து அதிகம் பிரசங்கித்துக் கேட்டதில்லை, எனவே இதைக் கவனிக்க நீங்கள் விரும்பலாம்.*

*நள்ளிரவில் பவுல் சீலா ஆகியோர் பாடல் பாடி, ஜெபம் செய்த செயலானது "இரவுப் பாடல்கள்" பற்றிய அநேக பிரசங்கங்களை ஏவியுள்ளன. ரிக் ஆட்ச்லீ அவர்கள், நாம் (1) நமது தொல்லைகளை தெளிவாகக் கண்ணோக்கினால், (2) நமது செல்வங்களைப் பரலோகத்தில் வைத்தால், (3) தேவன் மீது நாம் நம்பிக்கை கொண்டால், நமது தொல்லைகளின் நேரத்தில் நாமும் "இரவில் பாடல்" பாட முடியும் என்று ஆலோசனை தெரிவிக்கின்றார். (இந்தக் கருத்துக்கள், "வேதனையில் பாடுதல்" என்ற தலைப்பில் செப்டம்பர் 20, 1986ல் டெக்ஸாஸ், அபிலைனில் உள்ள தென்மலைகள் கிறிஸ்துவின் சபையில் பிரசங்கிக்கப்பட்ட பிரசங்கத்திலிருந்து வந்தவையாகும்.)*

*"யுகங்களின் மாபெரும் கேள்வி" (அப். 16:30) என்ற தலைப்பில் கூட அநேக பிரசங்கங்கள் பிரசங்கிக்கப்பட்டுள்ளன. சிறையதிகாரியின் வினாவானது அதனுள் அடங்கிய பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பகுதியும் ஒரு முக்கிய சிந்தனையைத் தருகின்றது: (1) "இரட்சிக்கப்படுவதற்கு" - காலவரையறையற்ற ஒரு கேள்வி, (2) "நான்" - தனிப்பட்ட ஒரு கேள்வி, (3) "என்ன" - சோதிக்கும் ஒரு கேள்வி, (4) "செய்ய" - செயல்பாடுள்ள ஒரு கேள்வி, (5) "வேண்டும்" - அவசியமான ஒரு கேள்வி.*

*நடபடிகள் புத்தகத்தில் மனமாற்றங்கள் குறித்து ஒரு தொடர் பிரசங்கம் பிரசங்கிக்க நீங்கள் தயாரானால், சிறையதிகாரியின் மனமாற்றம் பற்றிய பிரசங்கத்திற்கு இப்பாடத்தில் தேவையான விஷயங்கள் உள்ளன. அடிமைப் பெண்ணைப் பற்றிய நிகழ்ச்சியானது இவ்வரலாற்றின் பின்னணிக்காகச்*

சற்றுச் சுருக்கமாக ஆய்வு செய்யப்பட வேண்டும், பின்பு விரைவாகச் சிறையதிகாரியை அறிமுகப்படுத்த வேண்டும். அதிகாரத்தின் முடிவில், அதிகாரிகளிடத்தில் பவுலின் மறுப்பு பற்றி உள்ள விஷயத்தைக் காணாது விட்டு விடலாம் அல்லது சுருக்கமாகத் தெரிவிக்கலாம். "பயபக்தியற்ற ரோமச் சிறையதிகாரி" என்ற தலைப்பின் கீழ் உங்கள் பாடத்திற்கு அதன் முக்கிய கருத்துக்களில் உதவுவதற்காகச் சில துணைக்கருத்துக்களை நான் உள்ளடக்கியுள்ளேன். இந்தப் பாடத்தை ஆங்கில வார்த்தைகளில் மூன்று "C"க்களில் பிரிக்கக் கூடிய இன்னொரு வழியும் உள்ளது: (1) Convicts, குற்றம் சாட்டப்பட்டவர்கள், (2) A Concert, ஒரு இசை நிகழ்ச்சி, (3) A Conversion, ஒரு மனமாற்றம். சிறையதிகாரியின் மனமாற்றத்தைப் பற்றிப் பிரசங்கிக்க நான் பயன்படுத்திய ஒரு தலைப்பு, "சிறையதிகாரி ஞானஸ்நானம் பெற்றது ஏன்?" என்பதாகும். அதில் இவ்வரலாறு முழுவதையும் விளக்கி விட்டுப் பிறகு, "அப். 16:30, 31ல் விசுவாசத்தினால் மட்டுமே நாம் இரட்சிக்கப்படுகின்றோம் என்று போதிக்கப்படுமானால், சிறையதிகாரி ஞானஸ்நானம் பெற்றது ஏன்?" என்ற கேள்வியைக் கேட்பதுண்டு. மிகவும் குறிப்பிடத் தக்கதாக, "ஞானஸ்நானம் என்பது விருப்பத் தேர்வான சடங்காச்சாரா மாக இருக்குமென்றால், 'இராத்திரியில் அந்நேரத்தில்' அவர் ஞானஸ்நானம் பெற்றது ஏன்?" என்ற கேள்வியையும் நான் கேட்பதுண்டு.

## காட்சி-உதவிக் குறிப்புகள்

சிறையதிகாரியின் மனமாற்றத்திற்கு, ஒரு சாலையின் வரைபடம் ஒன்று பெரும்பாலும் காட்சி உதவிப் பொருளாகப் பயன்படுத்தப்படுகின்றது: அவ்வரைபடத்தின் இடது புறம் உள்ள நன்கறிந்த புறப்படும் இடத்தின் பெயர் ஒன்றை(இடம் அ)யும், அதன் வலது புறம் உள்ள நன்கறிந்த சேரும் இடத்தின் பெயர் ஒன்றை(இடம் ஆ) யும் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். இவ்விரு இடங்களுக்கும் இடையில் உள்ள சாலையை அழுத்தமான கோட்டினால் (வரைபடத்தில்) அடையாள

*மிட்டுக் கொள்ளுங்கள். கடைசியில் இவ்வழியில் இடையில் உள்ள ஏதேனும் இரு இடங்களை(நிறுத்தங்களை)த் தேர்ந்தெடுத்து அவைகளைத் தெளிவாக அடையாளமிட்டுக் கொள்ளுங்கள். வகுப்பில், இவ்வரைபடத்தைக் காண்பித்து, ஒருவர் 'அ' என்ற இடத்திலிருந்து 'ஆ' என்ற இடத்துக்குப் போவதாக வைத்துக் கொள்வோம் என்று கூறுங்கள். அந்த நபர் 'அ' விலிருந்து 'ஆ' வுக்குச் செல்லத் தொடங்கு முன்னர், யாராவது ஒருவரிடம் "நான் சென்றடைய வேண்டிய இடம் எவ்வளவு தூரத்தில் உள்ளது?" என்று கேட்கின்றார். அதே கேள்வியை அவர் தமது முதலாவது மற்றும் இரண்டாவது நிறுத்தங்களிலும் கேட்கின்றார். ஒரே கேள்வியே ஒவ்வொரு தடவையும் கேட்கப்பட்டாலும், மாறுபட்ட பதில்களே கிடைக்கும் - ஏனென்றால் அவர் ஒவ்வொரு தடவையும் தாம் சென்று சேர வேண்டிய இடத்தை அதிகம் நெருங்கியிருக்கின்றார். புத்தகத்தில் "நான் என்ன செய்ய வேண்டும்" என்ற அடிப்படையான கேள்வியானது மூன்று முறைகள் கேட்கப்பட்டிருந்தாலும் (2:37; 22:10; 16:30), ஒவ்வொரு முறையும் (2:38, 22:16; 16:31) சற்று வித்தியாசமான பதில்கள் தரப்பட்டன. இதில் முரண்பாடுகள் எதுவும் இல்லை; கேட்ட ஒவ்வொருவரும் "இரட்சிப்பிற்குப் போகும் சாலையில்" மாறுபட்ட இடங்களில் நின்று கொண்டு கேட்டதனால் தான் மாறுபட்ட பதில்களைப் பெற வேண்டியதாயிற்று.*

---

*குறிப்புகள்*

*[1]இந்த நிகழ்ச்சிகள் நடந்தபோது லூக்கா, தாமும் அங்கிருந்ததைக் குறிப்பிடுவதற்காகத் தொடர்ந்து தன்மைப் பெயர்ச் சொற்களையே பயன்படுத்தினார். [2]குறைந்த பட்சம் பழங்கால எழுத்தாளர் ஒருவரின்படி, "மலைப்பாம்பு" என்ற சொற்றொடரானது "வேறிடத்திலிருந்து குரல் வருவது போல் பேசுபவரை"க் குறிப்பிடவும் பயன்படுத்தப்பட்டது, மற்றும் இந்த உண்மையானது தற்கால எழுத்தாளர்களால் அடிக்கடி சுட்டிக் காட்டப்படுகின்றது - ஆனால் அந்த நாட்களில் "வேறிடத்திலிருந்து குரல் வருவது போல் பேசுபவர்" என்ற சொற்றொடரின் அர்த்தத்தைத் தவறாகப் புரிந்து கொண்டிருக்கச் சாத்தியக் கூறுண்டு. இன்றைய நாட்களில் "தமது குரலை வீசி எறியும்" ஒருவரைக் குறிப்பிட இச்சொற்றொடரை நாம் பயன்படுத்துகின்றோம், மற்றும் இது அதிகம் அறிந்தவர் போல் நடிப்பவருக்குத் தேவையான பயனுள்ள ஒரு திறமையாய் இருக்கும்:*

உருவங்கள் பேசுவது போலவும், கடவுள்கள் மேலிருந்து பேசுவது போலவும் உள்ளது போன்ற இன்னும் பல காரியங்களை அவர்கள் தோற்றுவிக்க வேண்டியிருக்கும். ஆயினும் இந்த வார்த்தையானது (ventriloquism) "வயிற்றிலிருந்து பேசுதல்" என்ற நேரடி அர்த்தம் கொண்டதாகும் ; வேதாகமத்தின் காலங்களில், இது, ஆவிகள் சரீரங்களில் புகுந்து கொண்டு அவைகளின் குரல்களிலேயே அவைகளின் வயிற்றிலிருந்து பேசின என்ற (அதாவது அவைகளின் வயிறுகளில் இருந்து பேசின என்ற) மூட நம்பிக்கையைக் குறிப்பிட்டிருக்கலாம். [3]நாம் படிக்கும் இவ்வரலாற்றில் இதற்கு ஆதாரம் உள்ளது. அசுத்த ஆவியின் மூலம், அவள் பவுலும் சீலாவும் மற்றவர்களும் உன்னதமான தேவனுடைய ஊழியக்காரர்கள் என்பதை அறிந்திருந்தாள். பிசாசுகள் எல்லாம் *அறிந்தவையல்ல* என்பதைக் கவனிக்கவும். ஆயினும், குறி சொல்லுபவர்களை நம்புவதற்கு வேறு அதிகமான காரணம் எதுவும் தேவைப்படுவதில்லை. [4]இயேசு, தமக்காகப் பிசாசுகள் சாட்சியளிப்பதை அனுமதிக்கவில்லை (மாற். 1:24, 25, 34). [5]அவர்கள் பவுலையும் சீலாவையும் மட்டும் பிடித்து, லூக்காவையும் தீமோத்தேயுவையும் பிடிக்காமல் விட்டது ஏன் என்று நாம் அறியவில்லை. பவுலும் சீலாவும் பெரும்பாலும் யூதர்களைப் போலக் காணப்பட்டதால் (லூக்கா ஒரு புறஜாதியார், தீமோத்தேயு ஒரு அரைப்புறஜாதியார்) இப்படி நடந்திருக்கலாம் என்று ஆலோசிக்கப்படுகின்றது (வ. 20). விளக்கம் அநேகமாக மிகவும் எளியதே: அவர்கள் பவுலைத்தான் பிடிக்க வேண்டும் என்று தேடினார்கள், பவுலைப் பிடித்தபோது சீலாவும் தற்செயலாக அங்கிருந்தார். [6]பிலிப்பியில் யூதர்கள் பிரசித்தி பெற்றவர்களாயிருக்கவில்லை என்பது தெளிவு. அதிகாரம் 18ல், ரோமாபுரியிலிருந்து யூதர்கள் வெளியேற்றப்பட்டதைக் கவனிப்போம் (வ. 2). ஒருவேளை அது ஏற்கனவே நடந்திருக்கலாம், ரோமக் குடியேற்றப் பட்டணங்களில் யூதருக்கெதிரான உணர்வானது வழக்கத்தைக் காட்டிலும் அதிகமானதாய் இருந்திருக்கலாம். [7]இதை நினைவில் வையுங்கள்: ரோமக் குடியேற்றப் பட்டணங்களில் இருந்த குடிமக்கள் ரோமாபுரியில் இருந்தவர்களைக் காட்டிலும் அதிக நாட்டுப்பற்றுடன் இருந்தார்கள். [8]ஐரோப்பாவின் அநேக பகுதிகளில் உள்ள நினைவுச் சின்னங்களில் இதை - நடுவில் கோடரி கொண்ட தடிகளின் கட்டு இருந்ததை - நான் கண்டிருக்கின்றேன். [9]பிலிப்பியில் அவர் பெற்ற இந்த அடிகள் அவர் நீடிய பொறுமையுடன் சகித்திருந்தவைகளில் ஒன்றே ஒன்று ஆகும். [10]இப்படிப்பட்ட சூழ்நிலையில் நான் இருந்திருந்தால், "துக்கப் பாடல்களையே" நான் பாடியிருப்பேன். ஆனால் அவர்கள் துதிப்பாடல்களைப் பாடினார்கள்.

[11]தேவனிடத்தில் கொள்ளும் விசுவாசமே திறவுகோலாகும். தேவன் மாறாதவராகவே இருக்கின்றார். நமது வாழ்வில் எல்லாம் நன்றாய் நடக்கும்போது அவர் நமது துதிகளுக்குப் பாத்திரர் என்றால், நமது வாழ்க்கையில் ஒவ்வொன்றும் பாதகமாய் நடக்கும்போதும் கூட அவர் நமது துதிகளுக்குப் பாத்திரராகவே இருக்கின்றார். [12]ஏதோ ஒரு வழியில், இதில் தூதர்களின் ஈடுபாடு - இதற்கு முன்பு இருமுறை சிறையிலிருந்து தெய்வீகமாய் விடுவிக்கப்பட்ட நிகழ்ச்சிகளில் (அப். 5:19; 12:7, 10, 11) போலவே - இதிலும் இருந்திருக்கலாம். [13]குறைந்தபட்சம், அவர்கள் ஏதோ ஒரு வகையில் தெய்வீகத்தைப் பிரதிநிதித்துப் படுத்தினார்கள் என்று அவர்

நினைத்தார். [14]சிறையதிகாரியின் "வீட்டார் அனைவரும்" ஞானஸ்நானம் பெற்றார்கள் என்ற உண்மையினால் சிலர் குழந்தை ஞானஸ்நானம் உண்டு என்பதை நிரூபிக்க முயற்சி செய்கின்றார்கள். இருப்பினும், அவருடைய வீட்டில் இருந்த யாவரும் (வ. 33) ஞானஸ்நானம் பெறுமுன் முதலில் போதிக்கப்பட்டார்கள் (வ. 32) என்பதைக் கவனியுங்கள். இக்கருத்தைப் பற்றிய மற்ற விவாதங்களை "அப்போஸ்தலருடைய நடபடிகள், பாகம் 3" இதழில் காணவும். [15]சிறைச்சாலையினுள்ளேயே சிறு குளம் ஒன்று இருந்திருக்கலாம், ஆனாலும் அவர்களைச் சிறைச்சாலைக்கு வெளியே அழைத்துச் செல்வதில் சிறையதிகாரிக்குப் பிரச்சனை எதுவும் ஏற்பட்டிருக்க வாய்ப்பில்லை. அவர்களை "பத்திரமாய்க் காவல் பண்ணும்படிக்குத்தான்" அவருக்கு உத்தரவாகியிருந்தது, அவர்களை அவர் பூட்டியே வைத்திருக்க வேண்டிய அவசியமில்லை. [16]பவுலும் சீலாவும் கைது செய்யப்பட்ட நேரம் தொடங்கி உணவு எதுவும் உண்டிருக்க வாய்பில்லாதிருந்தது. மீண்டும் ஒருமுறை கிறிஸ்தவ உபசரிப்பானது நடபடிகள் புத்தகத்தில் வலியுறுத்தப் படுகின்றது. [17]சிறையதிகாரியின் மனமாற்றத்தைக் கிறிஸ்புவின் மனமாற்றத் துடன் ஒப்பிட்டுப் பாருங்கள்: கிறிஸ்பு விசுவாசமுள்ளவரானார் (18:8) என்ற கூற்றில் அவர் ஞானஸ்நானம் பெற்ற பதில்செயலும் (1 கொரி. 1:14, 15) உள்ளடக்கியிருக்கின்றது. [18]இவ்விவாதம் பின்வருவது போல் அமைகின்றது: ''அப். 16:31 ஞானஸ்நானத்தைக் குறிப்பிடுவதில்லை; ஆகையால் இரட்சிப்புக்கு ஞானஸ்நானம் அவசியமில்லை." இந்த விவாதம் செல்லத் தக்கதானால், மனந்திரும்புதலும், அறிக்கையிடுதலும் கூட இரட்சிப்புக்கு அவசியமில்லையென்றாகின்றது, ஏனெனில் அவைகளைப் பற்றிக் கூட அப். 16:31ல் குறிப்பதாகக் கூறப்படவில்லை! ஒருவர், "ஆனாலும் 'விசுவாசம்' என்ற வார்த்தையில் மனந்திரும்புதலும் அறிக்கையிடுதலும் உள்ளடங்கி யிருக்கின்றன'' என்று கூறுவாரேயானால், பிறகு, ஞானஸ்நானமும் 'விசுவாசம்' என்ற வார்த்தையில் ஏன் உள்ளடங்கியிருக்கக் கூடாது? [19]பவுலைப் போலவே சீலாவும் ரோமக் குடியுரிமை பெற்றிருந்தார் என்பது உறுதி. [20]உலகப் பிரகாரமான பதிவுகளில், ஒருவர் '*civis Romanus sum*' அதாவது ''நான் ஒரு ரோமானியக் குடிமகன்'' என்று சத்தமிட்டால் போதுமானது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தர்சுப் பட்டணத்தில் பவுல் தம்மை ஒரு ரோமக்குடி மகனாகப் பதிவு செய்திருந்திருப்பார்; ஆனால் அநேகமாக அதற்கான ஆதாரத்தை அவர் தம்முடன் எடுத்துச் செல்லாதிருந்திருக்கலாம், பதிவுப் பத்திரத்தின் ஒரு நகலுக்காக அனுப்பி வைக்கச் சற்றுக் கால அவகாசம் தேவைப்பட்டிருக்கலாம்.